**செய்தி வெளியீடு எண்: 717** **நாள்:30.09.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>குழந்தைகள் உரிமை – பத்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்த சவால்கள், முன்னுரிமைகள், பங்கேற்பு பற்றி இணைய வழி கருத்தரங்கு</u>

**குழந்தைகள் உரிமை – பாதுகாப்பு – சவால்கள், முன்னுரிமைகள் பங்கேற்பு** என்ற தலைப்பில் இன்று 30.09.2020 மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவில் ஒரு இணைய வழி கருத்தரங்கு நடத்தப் பெற்றது. மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் துணைத்தலைவர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்களின் தலைமையின் கீழ், சமூகப் பாதுகாப்பு துறை, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, பள்ளிக் கல்வித் துறை, தொழிலாளர் நலன், மாநில குற்ற ஆவணக் காப்பகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, போக்குவரத்துத் துறை அலுவலர்கள் மற்றும் குழந்தைகள் உரிமை பாதுகாப்பிற்கான மாநிலக் குழு, குழந்தைகள் நலனுக்கான இந்தியக்குழு, யுனிசெப் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் துறைவல்லுநர்களின் பங்கேற்புடன் இக்கருத்தரங்கு நடைபெற்றது .

குழந்தைகள் நலனை முன்னிறுத்தி, அவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு இவற்றை மேம்படுத்தும் திட்டங்கள், சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் காணப்படும் இடைவெளிகளைக் களைவதும், குழந்தைகளின் இடைக்கால, நீண்ட காலத் தேவைகளை நிறைவேற்ற குழந்தை நேய அணுகுமுறையில் அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டறிவதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

இக்கருத்தரங்கில், சட்டத்துடன் முரண்பட்ட குழந்தைகள், பெண் குழந்தைகளின் பத்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு, குழந்தைகள் தத்தெடுத்தல் மீதான தற்போதைய நடைமுறைகள், குழந்தைகளை தவறாக நடத்துதலைத் தடுத்தல், சிறுமியர்களின் பாதுகாப்பு, காப்பகங்களில் உள்ள குழந்தைகளின் தேவைகள் மீதான கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. சமூகப் பாதுகாப்புத்துறை, சமூக நலத்துறை அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்கள், தமிழக அரசால் செயல்படுத்தப்படும் பல முன்னோடித் திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர். மேலும், கருத்ததரங்கின் மையப் பொருள் குறித்த தங்களது கருத்துகளையும், பரிந்துரைகளையும் விளக்கக் காட்சிப்படம் வாயிலாக விளக்கி கூறினார்கள்.

முன்னதாக, மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் துணைத் தலைவர் திரு.சி. பொன்னையன் அவர்கள் தனது தலைமை உரையில் குழந்தைகள் மேம்பாட்டிற்காகத் திட்டங்கள் வகுத்து செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, குழந்தைகள் வாழ்வின் அனைத்து தளங்களிலும் சம வாய்ப்புகளைப் பெறுவதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது என்று தெரிவித்தார். மேலும், தமிழகத்தின் கடைக்கோடியில் வாழும் குழந்தைகளையும், பயன்கள் சென்றடையும் வண்ணம், திட்டங்கள் வகுக்கப்பட்டு, குழந்தைகளின் உரிமைகள் மதிக்கப்பெறவும், பாதுகாக்கப்படுவதையும் மேம்பாடு அடையச் செய்வதையும் உறுதி செய்யும் வகையில் இக்கருத்தரங்கின் பரிந்துரைகள் அமைந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் திரு.அனில் மேஷ்ராம் இ,ஆ,ப., தற்காலச் சூழலுக்கேற்ப குழந்தைகளின், குறிப்பாக சமூகத்தின் விளிம்பு நிலையிலுள்ள பாலியல் தொழிலாளர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், சிறைக்கைதிகள், ஆயுள் தண்டனைக் கைதிகள் பெண் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களிலுள்ள குழந்தைகள் ஆகியோரின் பத்திரத்தன்மையையும், பாதுகாப்பையும் உறுதி செய்யத்தக்க உத்திகளையும், செயல் திட்டங்களையும் வகுக்கப்பட வேண்டியதின் தேவையை வலியுறுத்தினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**